தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1981, ஏப்ரல் 7 ஆம் நாள்
பங்குனி 25, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.''

மனத் தெளிவுடன் ஆராய்ந்து கொண்டிருக்கிற செயல்களைச் சோர்வு கொள்ளாமல், காலம் கடத்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

துவரங்குரிச்சி சார் பதிவாளர் அலுவலகக் கட்டிடம்.

*வினா எண் 666—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துவரங்குரிச்சியில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகக் கட்டிடம் புதிதாக கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் திட்டம் மதிப்பீடு என்ன ?

(இ) அதன் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) துவரங்குரிச்சியில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டிடம் கட்ட கருத்துரு ஒன்றும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

[1981 ஏப்ரல் 7

திரு. மே. அ. இராசகுமார் :—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள துவரங்குரிச்சியில் பல்வேறு அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த நிலையைப் போக்கி விரைவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே அலுவலகங்கள் நடைபெறும் வகையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து கோரிக்கை வந்தால் அரசு அதனைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோள் பேரில் அவரது வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

தாந்தோணி மலைக்கு அருகில் மார்கெட்டிங் கமிட்டிக்கான நில ஆர்ஜிதம்.

*வினா எண் 674—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலூக்கா தாந்தோணி மலைக்கு அருகில் மார்க்கெட்டிங் கமிட்டிக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஏக்கர் எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 8.25 ஏக்கர்.

போச்சாம் பள்ளியிலுள்ள சனோலா எண்ணெய் தொழிற்சாலை.

* வினா எண் 675—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் தமிழ்நாடு வேளாண் தொழிற்கழகத்தின் மூலம் செயல்பட்டு வரும் சனோலா ஆயில் தொழிற்சாலை மாதத்தில் எவ்வளவு நாட்கள் இயங்கிவருகிறது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS